11. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

(ஆ) 29—4—1993 ஆம் தேதிய நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ள சட்டமுன்வடிவை 30—4—1993 அன்று எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1993), மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 11/1993) நாளை (30—4—1993) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்'' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை ஒப்புதல் அளிக்கிறது என்று கருதுகிறேன். பேரவையின் ஒப்புதலோடு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1993, நாளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதை அறிவிக்கிறேன்.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ). தனிப் பாதுகாப்புப்படைப் பிரிவு சட்டமுன்வடிவு, 1993 (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத்தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனிப் பாதுகாப்புப் படைப் பிரிவு சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1993) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

12. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஊ) தனிப் பாதுகாப்புப் படைப் பிரிவு சட்ட முன் வடிவு 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனிப் பாதுகாப்புப் படை பிரிவு சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1993), மாண்புமிகு நிதியமைச்சர்.